**செய்தி வெளியீடு எண்: 629** **நாள்: 18.10.2012**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் தக்கார் திரு. கருமுத்து தி. கண்ணன் அவர்கள் இன்று (18.10.2012) தலைமைச் செயலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பின்போது, அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் பழமை வாய்ந்த கொடிமரத்திற்குப் பதிலாக புதிய கொடிமரம் அமைக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வருவதாகத் தெரிவித்து, திருக்கோயில் இருப்பில் உள்ள 16 கிலோ தங்கத்தை பயன்படுத்தி புதிய கொடிமரம் அமைக்க அனுமதி வழங்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை கேட்டுக் கொண்டார்.

இந்தக் கோரிக்கையினை ஏற்று, புதியதாக தங்கத் தகடுகள் பதித்த கொடிமரத்தினை அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டார்கள்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 18.10.2012